நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 11-ம் நாள் புதன்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.370/2026
CNR.No.TNTS02-0001164-2026
IN
CSR.No.80/2026

செல்வகணேசன்,
த/பெ.குத்தாலிங்கம்,
26 மரக்கடைத்தெரு,
புளியங்குடி,
தென்காசி மாவட்டம் ... மனுதாரர்

/எதிர்/

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
தென்காசி சைபர் கிரைம் காவல் நிலையம்,
சைபர் கிரைம் CSR.No.80/2026 ... எதிர்மனுதாரர்

மனுதாரர் பிரிவு 497 மற்றும் 503 BNSS-ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனுவின் சுருக்கம் பின்வருமாறு ...

**<u>உத்தரவு</u>**

மேற்படி மனுதாரர் தரப்பில் தான் மனுதாரர்/புகார்தாரர் ஆவேன் என்றும், தன்னிடம் இணைய வழியில் சுமார் 39,000/-த்தை மோசடி செய்தது தொடர்பாக வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கானது இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி வழக்கில் வாதி காவல்துறையினர் வழக்கு எதிரிகளை கண்டிருந்து மேற்படி தொகை வாதி காவல் துறையினர் Freez செய்து வைத்துள்ளனர் என்றும், மேற்படி விபரப்படி செலுத்தப்பட்ட தொகைகளை வாதி போலீசார் மேற்படி வங்கிகளிலிருந்து Freez செய்துள்ள தொகைகளை தனது வங்கியான State Bank of India புளியங்குடி கிளை A/c.No.34048875895 and IFSC No.SBIN0005202 கணக்கில் செலுத்த உத்தரவிட வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது என்றும், மேற்படி பணம் தனது மருத்துவ செலவுக்காக சேமித்து வைத்திருந்த பணமாகும் என்றும், மேற்படி பணத்தை வைத்துதான் தனது தாயாரின் மருத்துவ செலவு வகைகளை செய்ய வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், எனவே மேற்படி வாதி போலீசார் வங்கிகளிலிருந்து Freez செய்துள்ள தொகைகளை தனது வங்கியான State Bank of India புளியங்குடி கிளை

A/c.No.34048875895 and IFSC No.SBIN0005202 கணக்கில் செலுத்த உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் அறிவிப்பில், புகார்தாரரின் போனை APK File மூலம் ஹேக் செய்து ரூ.39,000/- வங்கி கணக்கிலிருந்து மனுதாரருக்கு தெரியாமல் எடுத்து விட்டதாக புகார்தாரர் கொடுத்த புகாரின் பெயரில் எதிரியின் வங்கி கணக்கில் கீழ்கண்டவாறு பணம் முடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும்,

| வ.எண். | எதிரியின் வங்கி கணக்கு விபரம் | | புகார்தாரர் எதிரியின் வங்கி கணக்கில் செலுத்திய பணம் | எதிரியின் வங்கி கணக்கில் முடக்கம் செய்யப்பட்ட பணம் | புகார்தாருக்கு திரும்ப கிடைக்க தகுதியான பணம் |
|---|---|---|---|---|---|
| | Account Holder Name | A/c.No.& Bank Name | | | |
| 1. | AratiDas Maidanpur Sakdaha West Bengal | 003521721059485 | Rs.39,000/- | Rs.35,935/- | Rs.35,935/- |
| மொத்தம் | | | Rs.39,000/- | Rs.35,935/- | Rs.35,935/- |

இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள எதிரிகளின் வங்கி கணக்குகளிலிருந்து முடக்கம் செய்யப்பட்டுள்ள ரூ.39,000/-லிருந்து மனுதாரரிடமிருந்து ஏமாற்றி பெறப்பட்ட தொகையில் ரூ.35,935/- பணத்தை பாதிக்கப்பட்ட புகார்தாரருக்கு திரும்பப்பெற்று தந்து உதவுமாறும், அதற்கு எந்தவித ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, மனுதாரர் இந்த வழக்கின் புகார்தாரராக உள்ளார். மேலும், அரசு தரப்பில்அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் அறிவிப்பில், புகார்தாரரின் போனை APK File மூலம் ஹேக் செய்து ரூ.39,000/- வங்கி கணக்கிலிருந்து மனுதாரருக்கு தெரியாமல் எடுத்து விட்டதாக புகார்தாரர் கொடுத்த புகாரின் பெயரில் எதிரியின் வங்கி கணக்கில் கீழ்கண்டவாறு பணம் முடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள எதிரிகளின் வங்கி கணக்குகளிலிருந்து முடக்கம் செய்யப்பட்டுள்ள ரூ.39,000/-லிருந்து மனுதாரரிடமிருந்து ஏமாற்றி பெறப்பட்ட தொகையில் ரூ.35,935/- பணத்தை பாதிக்கப்பட்ட புகார்தாரருக்கு திரும்பப்பெற்று தந்து உதவுமாறும், அதற்கு எந்தவித

ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரரின் மேற்படி பணம் ரூ.35,935/- மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. கீழ்கண்டவாறு எதிரிகளின் வங்கி கணக்கில் இருந்து முடக்கம் செய்யப்பட்ட தொகையில் இருந்து மனுதாரர் கணக்கு வைத்துள்ள State Bank of India புளியங்குடி கிளை A/c.No.34048875895 and IFSC No.SBIN0005202 கணக்கில் கீழ்க்கண்ட அட்டவணையில் இறுதி காலத்தில் குறிப்பிடப்பட்டவாறு தொகையை இடைக்காலமாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

| வ.எண். | எதிரியின் வங்கி கணக்கு விபரம் | | புகார்தாரர் எதிரியின் வங்கி கணக்கில் செலுத்திய பணம் | எதிரியின் வங்கி கணக்கில் முடக்கம் செய்யப்பட்ட பணம் | புகார்தாருக்கு திரும்ப கிடைக்க தகுதியான பணம் |
|---|---|---|---|---|---|
| | Account Holder Name | A/c.No.& Bank Name | | | |
| 1. | Aratidas Maidanpur Sakdaha West Bengal | 003521721059485 | Rs.39,000/- | Rs.35,935/- | Rs.35,935/- |
| மொத்தம் | | | Rs.39,000/- | Rs.35,935/- | Rs.35,935/- |

<u>நிபந்தனை:-</u>

1. மனுதாரர் Rs.35,935/-க்கு தான் சொந்த பிணை பத்திரமும், தனி ஒரு நபர் ரூ. 35,935/-க்கு பிணைப் பத்திரம் எழுதித் தரவேண்டும்.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் மார்ச் திங்கள் 11-ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI
Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.11 14:42:07 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.